**பக்கம் 32இன் தொடர்ச்சி:**

***இவற்றையெல்லாம் செய்யக்கூடிய சக்தி படைத்தவன் எப்படி வேண்டுமானாலும் வாழலாம், வாழ்ந்தும் காட்டலாம். எதற்கு எதை உவமை சொல்வது என்று அறியாதவர்கள் எல்லாம் நீதிபதிகளாகவும், கவிஞர் களாகவும் தம்மைப் பறை சாற்றிக்கொண்டு வாய்க்கு வந்தபடி பேச முற்பட்டு உள்ளனர். மஞ்சை வசந்தன், லீனா 'மணி'மேகலை, உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி பாலகிருஷ்ணன், மாண்புமிகு முதலமைச்சர் கருணா நிதி, கி. வீரமணி போன்றோர் புராண இதிஹாஸ நிகழ்ச்சிகளை மேற் கோள்காட்டி தங்கள் கருத்துக்களை வலியுறுத்த முற்படுவது ஏன்? வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ் என்று கொண்டாடப்படுகின்ற ஆண்டாள் நாச்சியார் எங்கே? மற்றைய சிறுமதி படைத்தோர் எங்கே? 'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழியை 'ஒப்பர் இவர்கள்.)***

பெண்களின் கருத்துச் சுதந்திரத்தைக் காலம் காலமாக ஆண்கள் பறித்து வந்திருக்கிறார்கள் என்று இவர் கூறுவது உண்மை யானால் ஆண்டாளை மட்டும் ஏன் விட்டுவைத்தது அந்த ஆண் சமூகம்? ஆண்டாளுக்குக் கோயில் கட்டி அவரைத் தெய்வமாக அல்லவா வழிபடுகிறது தமிழ்ச் சமூகம்!

இதற்கு என்ன காரணம் எனில், ஆண்டாளின் கவிதை களுக்குப் பின்னணியிலுள்ள எண்ண ஓட்டம் வித்தியாசமானது. இக்கால கவிதாயினிகளின் எண்ணங்களை ஆண்டாள் பாசுரங்கள் அணுவளவும் பிரதிபலிக்கவில்லை. இது ஆண்டாளின் கவிதை களைப் படித்துக் களித்தோர்க்கே புரியும். பெண் சுதந்திரம் என்றால் (நாய்களுக்கு உள்ள சுதந்திரத்தைப் போல) பாலியல் சுதந்திரம்தான் என்று இன்று சிலர் கருதுகிறார்கள். அதற்குப் புரட்சி என்றும் பெயர் வைத்துள்ளார்கள்.

ஆண்டாளின் நிலைப்பாடு இக்காலக் கவிதாயினிகளின் நிலைப்பாட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. குடும்பம், கணவன், இல்வாழ்க்கை, குழந்தைகள், குடும்பப் பராமரிப்பு, கணவனுக்கு பணிவிடை செய்தல் என்ற சராசரி உலகியல் பிணைப்புகளிலிருந்து விடுபட நினைத்த ஆண்டாளும் ஒரு புரட்சிப் பெண்தான் என்ற போதிலும் அவள் மானிடனை விரும்பாது மாதவனை மட்டுமே விரும்பி ஏற்றம் பெற்று உய்தவர். சராசரி மானிடப்பெண்ணின் உணர்வுகளைத் தன் கவிதைகளில் அவர் பதிவு செய்திருந்தாலும் தன் மனம், வாக்கு, காயம் இம்மூன்றையும் திருமாலுக்கே அர்ப் பணித்தவர் அவர். ''மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ கில்லேன்'' என்ற அவரது கவிதை வரிகளே இதற்குச்சான்று.

கவிதையில் மட்டும் ஆண்டாளைப் பின்பற்றும் இக்காலக் கவிதாயினிகள், தங்கள் வாழ்க்கையிலும் அவரைப் பின்பற்றலாமே! இவர்களால் அது முடியுமா? தங்களது கயமைத் தனங்களுக்கு பகவான் ஸ்ரீகிருஷ்ணனின் ராசலீலையை (ராசலீலையின் தத்துவ த்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல்) முன்னுதாரணம் காட்டு பவர்களால் பகவான் செய்த மற்ற செயல்களையும் (கோவர்த்தன மலையைத் விரல் நுனியில் தூக்கியது, வாயில் உலகைக் காட்டியது, இறந்தவனைப் பிழைக்க வைத்தது போன்ற மனித நிலைக்கு அப்பாற்பட்ட செயல்கள்) செய்ய முடியுமா?

விலைமகளின் மகளேயானாலும் தன் குலவழியைத் துறந்து தவவாழ்க்கை மேற்கொண்டு பெண்மைக்குப் பெருமை சேர்த்த ‘மணி’மேகலை அவதரித்த இந்தத்தமிழ் மண்ணில் இப்படிப்பட்ட மணிமேகலைகளும் தோன்றியிருப்பதுதான் காலத்தின் கொடுமை. இப்படித்தான் எழுத வேண்டும் என்ற விதிமுறை எதுவும் கவிதை களுக்கு இல்லை என்கிறார் லீனா. அப்படியானால் எப்படி வேண்டு மானாலும் கவிதை எழுதிப் பிரபலப்படுத்தலாம் என்று ஏதாவது விதி இருக்கிறதா? அந்த விதி எங்கே சொல்லப்பட்டிருக்கிறது? நல்லது-கெட்டது என்பதை விதிகள் ஏற்படுத்தி வரையறை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அனுபவ அறிவு ஒன்றே நல்லது கெட்டதைத் தீர்மானிக்கப் போதுமானது. உலக நடைமுறை அனுபவங்களே நல்லது-கெட்டதைத் தீர்மானம் செய்கின்றன. ***(ஒருவன் அல்லது ஒருத்தி ஆடையில்லாமல் தெருவில் வலம் வரலாமா? வரக்கூடாது என்பதற்கு எந்தச் சட்டமும் இல்லை. எந்தச் சட்டமும் போட முடியாது. ஆனால் அதை சமுதாயம் ஒரு கட்டுப் பாடாக விதித்துள்ளது. அதைப் போலத்தான் பல்வேறு ஒழுக்க நெறிகளும், வாழ்வியல் முறைகளும். எல்லாவற்றுக்கும் சட்டம் இயற்றினால் நாட்டில் காகிதப் பஞ்சம்தான் ஏற்படும்.)***

விஷத்தைக் குடிப்பது தவறு என்ற எந்த சட்டமும் சொல்ல வில்லை. ஆனால் விஷமருந்தியவனை தற்கொலைக்கு முயற்சி செய்தான் என்ற முறையில் வழக்குத் தொடரப்படுகிறது. விஷத்தைக் குடித்தால் உயிர் போகும் என்பது நடைமுறை அனுபவ உண்மை. ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் சட்டமும் நியதிகளும் இல்லை என்பதற்காக அந்த விஷயத்தில் எப்படி வேண்டுமானாலும் செயல்படலாம் என்று நினைப்பது விவேகமாகாது. ஆகவே ஆண்டாள் போன்றோர் தோன்றி யதால் பெருமை பெற்ற பெண் சமூகத்திற்கு இக்கால மணிமே கலைகள் பெரும் சவாலாகத் தோன்றியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு பெண் சமூகம் விழித்துக் கொண்டால் நல்லது.

கவிஞர் லீனா மணிமேகலையின் கவிதைகள் தடை செய்யப் படவேண்டும். சமூக ஆர்வலர்கள், திரைப்படங்கள், தொலைக் காட்சிகள், பொதுஜனப் சினிமாப்பத்திரிகைகள் இவற்றில் வரும் ஆபாசங்களைத் தடை செய்யக்கோரி முழக்கமிடாதது ஏன்? தற்கால சினிமாவில் ஆபாசக்காட்சிகளுக்கும், வன்முறைக் காட்சி களுக்கும் பஞ்சமில்லை. ***(கனவுக் காட்சிகள் என்ற போர்வையில் ஆபாசம் திணிக்கப்படுகிறது. ஆடும் பெண்கள் வக்ர உணர்வைத் தூண்டக்கூடிய விதவிதமான ஆடைகளைத் தரித்து ஆடுகின்றனர். இரட்டை அர்த்தம் தொனிக்கும் வசனங்கள். சொல்லப்போனால் நகைச்சுவை என்ற பெயரில் நாகரீகத்திற்கும் பண்பாட்டுக்கும் ஒவ்வாத காட்சிகள் திணிக்கப்படுகின்றன.)*** திரைப்படத் தயாரிப்பாளர்கள் சென்சாருக்கு லஞ்சம் கொடுத்துவிட்டு அம்மாதிரிப் படங்களை வெளியிடுகிறார்களா? அல்லது சென்சார் துறையில் உள்ளவர்களே இப்படிப்பட்ட சினிமாக்கள் சமூகத்தைக் கெடுத்து விடாது என்ற நம்பிக்கையில் சான்றிதழ் வழங்குகிறார்களா? என்பது கடவுளுக்கே வெளிச்சம். இவர்களுக்கு பாட்டாளிகள் தினமும் ஒன்றுதான். Valentine dayம் ஒன்றுதான். நுனிநாக்கில் ‘தமில்’ தெரியாது என்று பேட்டி கொடுக்கும் நடிகையுடன் உரையாடல் இடம் பெறவேண்டும். பணம் பண்ணுவது ஒன்றுதான் இவர்களுடைய குறிக்கோள். உழைப்பாளி வர்க்கத்தைப் பற்றி இவர்களுக்கு எந்தக் கவலையும் கிடையாது. மே தினம் ஏன் கொண்டாடப்படுகிறது என்பதைக் கூட இவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள்.

டி.வி. சீரியல்களை எடுத்துக்கொண்டால் கேட்கவே வேண்டாம். எவ்வளவுதூரம் மனித உறவுகளில் வக்ர உணர்வுகளை வெளிப்படுத்தி காட்சிகளை அமைக்க முடியுமோ? அவ்வளவிற்கு காட்சிகளைப் படமாக்கிப் புகுத்தி வருகின்றனர். இன்று கிட்டத்தட்ட எல்லா வீடுகளிலும் தொலைக்காட்சிப் பெட்டி இருப்பதால், ஒரு காலத்தில் திரையரங்களுகளோடு நின்ற பண்பாட்டுச் சீரழிவு இன்று நடுவீடுவரை வந்துவிட்டது. சினிமாச் செய்திகளையே பெரும் பாலும் வெளியிடும் பத்திரிகைகளின் முகப்பு அட்டையிலும், உள்ளேயும் பெண்களின் மிகவும் ஆபாசமான முக்கால் நிர்வாணப்படங்களைப் போட்டு இளைய சமூகத்தின் வக்ர உணர்வுகளுக்கு தீனிபோட்டு பணத்தை வாரிக்குவிக்கின்றனர் அந்தப் பத்திரிகளை நடத்தும் ‘‘நல்ல உள்ளங்கள்.’’

ஆபாசம், பண்பாட்டுச்சீரழிவு பற்றிப் பேசும் சமூக ஆர்வலர்கள் சினிமாத்துறை, தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள், பொதுஜனப் பத்திரிகைகள் இவற்றையும் கொஞ்சம் கண்டு கொள்ள லாமே! கவிதை,

கட்டுரை இவையெல்லாம் படித்தவர் மத்தியில்தான் பாதிப்பை ஏற்படுத்தும். ஆனால் சினிமாக் காட்சிகள் சிறுவர் தொடங்கி படிக்காத பாமரன்வரை பாதிப்பை ஏற்படுத்தும். ✱✱✱

## கோபுரங்கள் சாய்வதில்லை.

**கோதை மைந்தன்- உ.நரசிம்மன் (தேப்பெருமாநல்லூர்)**

காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார் தமிழக அரசின் முத்திரையில் பொறிக்கப்பட்டுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயில் கோபுரச்சின்னத்தை நீக்கி விட்டு திருவள்ளுவரின் சின்னத்தை பொறிக்கவேண்டும் என்று சட்ட சபையில் பேசியுள்ளார். அதற்கு அவர் கூறும் காரணம் கோபுரம் குறிப்பிட்ட ஒரு மதத்தின் (ஹிந்துமதச்) சின்னம் என்பது.

செம்மொழி மாநாட்டிற்கு தமிழக அரசு வடிவமைத்துள்ள திருவள்ளுவரின் உருவம் பொறித்த சின்னம் ஸ்டிக்கர்களாக (Sticker) பேருந்துகளில், அரசுப் பேருந்துகளின் சின்னம்போல் ஒட்டப்பட்டு உள்ளதைக் கண்டோ என்னவோ, திருவள்ளுவர் உருவத்தை, தமிழக அரசின் இலச்சினையாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் மாண்புமிகு திரு. இரவிக்குமார் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. தமிழ், சிதம்பரம் கோயிலில் வழிபாட்டில் இல்லை என்ற ஒரு பொய்யான காரணத்தைக் கூறி போராட்டம் நடத்தி கையகப்படுத்திக் கொண்ட நாத்திக மைனாரிட்டி தி.மு.க. அரசு இப்போது விடுதலை சிறுத்தைக் கட்சி உறுப்பினர் மூலம் மற்றொரு ஹிந்து விரோத விஷத்தை உமிழ்ந்துள்ளது.

சங்கத்தமிழ்மாலை எனத்தனது திருப்பாவை பாசுரங்களை முத்திரையிட்டு முழங்கிய பச்சைத் தமிழச்சியாம், ‘‘ஆழி மழைக் கண்ணா’’ என்னும் திருப்பாவை பாசுரம் மூலம் கடல் நீரை சூரியன் எடுத்துச் சென்று மேகங்கள் மூலம் பின்பு மழையாகப் பொழியும் அறிவியல் உண்மையைப்பாடிய ‘‘அறிவியல் தமிழச்சி’’ ஆண்டா ளினை பல நூறு ஆண்டுகளாகத் தமிழர்கள் உலகெங்கிலும் உள்ள இந்துக்கள் தெய்வமாக வழிபட்டு நாடெங்கும் கோயில்களையும் கட்டி வைத்துள்ளார்கள். ஆண்டாள் புண்ணிய பூமியாம் ஸ்ரீவில்லி புத்தூர் கோயில் கோபுரம் தமிழக அரசின் இலச்சினையில் இருப்பது தமிழகத் திற்கு பெருமை, பெண் இனத்திற்குப் பெருமை, தமிழர்களின் கட்டிட கலைக்குப் பெருமை, பண்பாட்டிற்கும் பெருமை.

ஸ்ரீஆண்டாள் திருக்கோயிலின் கோபுரச் சின்னம் மதவாத மென்போர் பெண் இனத்திற்கு எதிரானோர். இவர்கள் சொல்வது போல் திருவள்ளுவர் உருவம் தமிழக அரசின் சின்னமாக்கப்பட்டால் அதை கிறிஸ்துவர்களோ, முகம்மதியர்களோ ஏற்பார்களா? திருவள்ளு வர் உருவம் இதுதான் என்பதற்கு என்ன ஆதாரம்? திருக் குறளோ ''பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீத்தார் இறைவனடி சேராதார்'' என்கிறது. இக்குறளிலுள்ள திருவள்ளுவரின் இறைவனடி என்பதை நாத்திகர்கள் ஏற்பார்களா? (இதை இடைச்செறுகல் என்று எளிதாக ஒதுக்கிவிடலாம்.)

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.** (குறள்-398)

**வேண்டுங்கால் வேண்டும் பிறவானம்; மற்றது**
**வேண்டாமை வேண்ட வரும்** (குறள்-362)

என்ற குறள்களில் குறிப்பிட்டுள்ள மறுபிறவி நம்பிக்கையை கிறிஸ்தவ, இஸ்லாமிய மறுபிறவி மறுப்பு மதங்கள் ஏற்குமா? ***(இதையெல்லாம் இடைச்செருகல், உரைஎழுதிய பரிமேலழகரான ஆரியனின் சூழ்ச்சி என்றெல்லாம் கட்டுரைகள் எழுதி பரப்ப முற்பட்டாலும் வியப்புக் கொள்வதிற்கில்லை.)*** திருக்குறளை எதிர்த்து குறளா? குரானா? என மதனி நூல் எழுதியதை நாடே அறியாதா? வாலறிவன், தாமரைக் கண்ணன்உலகு, ஆதிபகவன் என்னும் சொற்களால் திருமாலையும் இந்திரன் போன்ற தேவர்கள் பெயரையும் குறிப்பிடும் திருக் குறளினை மற்றைய மதத்தவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. திருக்குறள் வெளிப்படுத்தும் கருத்துக்களான புலால் உண்ணா மையை ஏசு நாதரே கடைபிடிக்கவில்லை. இஸ்லாமிய மதம் புலால் உண்ணாமையை ஆதரிக்கவில்லை.

வந்தே மாதரத்தில் லக்ஷ்மி, சரஸ்வதி, சக்தி என பாரததேசம் உருவகப்படுத்தப்பட்டதாலேயே முகம்மதியர்கள் வந்தே மாதரத்தை பாடமறுத்தது நினைவில்லையா? உண்மை இப்படியிருக்க திருக் குறள் கருத்துக்களையே (நீதிகளையே) ஏற்காத மதங்கள் எப்படி திருவள்ளுவரை ஏற்கும்? மனுவின் கருத்துக்களை தனது குறளில் பதிவு செய்துள்ள திருவள்ளுவர் எப்படி மதச் சார்பற்றவரானார்? பெண்களுக்குப் பஞ்ச மகா யஜ்ஞம், உபவாசம் விரதம் இவை முதலிய தருமங்கள் தனியாக

இல்லை கணவனுக்குப் பணிவிடை செய்வதாலேயே ஸ்வர்க்கத்தில் பெருமை பெறுகிறார்கள் (மநு-155. அத். 4)

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்**
**பெய்எனப் பெய்யும் மழை.**

என மனுவினை மறுபதிப்பு செய்துள்ளார் வள்ளுவர் மனுவின் கருத்தை வழிமொழியும் வள்ளுவன் மதவாதி என்று எதிர்ப்பார்களே.

இந்து மத எதிர்ப்புணர்வு கொண்ட நாத்திக (போலி மதச் சார்பின்மை) அமைப்புகள் இராமர் பாலத்தை இடித்துவிட்டால் இராமர், இராமாயணம் என்பவை எல்லாம் கட்டுக்கதை எனப் பொய் பிரச்சாரம் செய்து மக்களை நம்ப வைக்க சேது சமுத்திர திட்டத்தால் இராமர் பாலத்தை உடைக்க முயற்சித்துத் தோற்றுப் போனதால் உண்டான சினத்திற்கு வடிகாலாக ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயில் கோபுரச் சின்னம் மதவாதம் என்னும் விஷவாதப் பொய் வாதத்தைக் கிளப்புவது நாத்திக வக்ரபுத்தி போலி மதச்சார்பின்மை மூலம் கிறிஸ்தவ, முஸ்லீம் மதத்தினரை சமாதானப்படுத்தும் அடிமை புத்தி. கோபுரம் மதவாதமென்றால் செஞ்சிலுவைச் சின்னம்கூட மதச்சின்னம்தான், இரண்டு ரூபாய் நாணயத்தில் வரும் சிலுவை வடிவம் கூட மதச்சின்னம்தான். திருவள்ளுவருக்குத் தெய்வப்புலவர் என்ற பெயரும் உண்டே. தெய்வ நம்பிக்கை இல்லாத நாத்திகர்கள் திருவள்ளுவரை ஏற்றுக்கொள்வார்களா?

உலகம் முழுவதுமுள்ள இந்துக்களின் மனதில் தன் உன்னத பக்தியால் பாசுரங்களால் கோபுரத்தைவிட உயர்ந்துநிற்கும் ஸ்ரீஆண் டாளின் திருக்கோயில் கோபுரத்தின் வடிவம் மதத்தையும் மீறிய கலாச்சார பெருமை, தமிழனின் கட்டிடக் கலையின் பெருமை, அதை மத அடை யாளம் என்போர் தமிழனின் கட்டிடக்கலை கலாச்சார பெருமையை உலகறியச் செய்வதைத் தடுக்கும் சிந்தனை கொண் டோர் ஆவர். தமிழர் பண்பாட்டை உலகறியச் செய்ததில், பக்தி இலக்கியங்களுக்கு இருக்கும் பங்களிப்பை ரவிக்குமார் மட்டுமல்ல இன்னும் 'ஆயிரம் கலைஞர்கள்' வந்தாலும் மறைத்துவிட முடியாது. பக்தி இலக்கியங்கள் இல்லாமல் தமிழ் இல்லை. பக்தி இலக் கியங்களில் சொல்லப்படாத தமிழரின் பண்பாட்டை, கலாசாரத்தை வேறு எந்த இலக்கியங்களும் எடுத்து பறைசாற்றவும் இல்லை. அதிலும் ஆண்டாள் தமிழச்சியாக பிறந்து தமிழில் இறைவனை பாடி,

அவரே வழிபடக்கூடிய தெய்வநிலைக்கு உயர்ந்தவர். தமிழ்ப் பெண்குலத் துக்கு பெருமை சேர்த்தவர். அப்படிப்பட்ட ஆண்டாள் கோயில் கோபுரத்தை அரசுச்சின்னத்தில் இருந்து எடுக்க வேண்டும் என்று பேசுவது சரியல்ல. ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. ராம சாமி அவர்கள் கீழ்க்கண்ட கருத்துக்களை தமிழக அரசியல்- 22-4-2010 தேதியிட்ட இதழில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

''இதை ரவிக்குமாரின் ஆலோசனையாக மட்டும் நாங்கள் பார்க்கவில்லை. முதல்வரின் ஆலோசனைப்படிதான் ரவிக்குமார் சட்ட சபையில் பேசியுள்ளார். ஏப்ரல் 17ஆம் தேதி ஆலோசனை கூட்டம் நடத்தி தி.மு.க. அரசையும், விடுதலை சிறுத்தைகள் கட்சியையும் கண்டித்து போராட்டம் நடத்தவுள்ளோம். எகிப்து என்றால் பிரமிடு நம் நினைவுக்கு வருவதற்கு கட்டடக்கலையும், கலாசாரமும் தான் காரணமே, தவிர மதம் அல்ல. அதுபோல தாஜ்மஹாலையும் காதலின் சின்னமாகவே பார்க்கிறோமே தவிர மதத்தின் அடை யாளமாக அல்ல. இவைபோலதான் ஆண்டாள் கோபுரத்தை தமிழ் கலாசாரத்தின் அடையாளமாக பார்க்க வேண்டுமேயன்றி மதத்தோடு தொடர்புடையதாக கருதக்கூடாது''.

**ஆசிரியர் குறிப்பு:**

***நாட்டில் மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனை களுக்கு முடிவு காண்பதற்கு இவர்களால் இயலவில்லை. ஆனால் கோபுரம் அரசின் முத்திரையில் இருந்து மாற்றப்பட்டால் நாட்டிலே தேனும், பாலும் ஓடத் தொடங்கும். விலைவாசி ஏற்றம் தடுக்கப்படும். மக்கள் அனைத்துத் துன்பங்களிலிருந்தும் விடுதலை பெற்றிடுவர் , நாடெங்கும் தட்டுப்பாடு இல்லாமல் குடிநீர் கிடைக்கும் என்பதுபோலப் பேசி வருகிறார்கள் நம் தமிழ் நாட்டின் அரசியல் தலைவர்கள். இந்தக் கோரிக்கையை ஒரு முகம்மதியரோ ஒரு கிறிஸ்தவரோ முன் வைக்கவில்லை. திருவள்ளுவர் இப்படித்தான் இருந்தார் என்பதற்கு என்ன ஆதாரம்? திருவள்ளுவர் ஒரு ஜைனரே என்று வாதிடுவோர் அவரை நிர்வாணக் கோலத்தில் ஒரு தீர்த்தங்கரராகக் கொண்டுள்ளனர். மழித்தலும் நீட்டலும் வேண்டா என்று சொன்ன திருவள்ளுவருக்குத் தாடிஏன், மீசை ஏன்? இப்போது நாம் காணும் திருவள்ளுவர் அவர் வாழ்ந்த காலத்தில் உள்ள அவரது தோற்றத்தை உண்மை வடிவில் வெளிப்படுத்துகிறதா? எந்த நாட்டிலும் இத்தகைய பேச்சுச் சுதந்திரம்***

*அளிக்கப்படுவதில்லை. வீரமணியாரும் இந்தக் கோரிக் கைக்குப் பின்பாட்டு வாசித்துள்ளார். தமிழக அரசின் சின்னத்திலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரத்தை நீக்கிவிட்டால் இவர்களுடைய கோரிக்கைகள் முடிந்துவிடுமா? தமிழக அரசின் சின்னத்தில் சிலுவை, பிறையுடன் கூடிய 786, திருவள்ளுவர் ஆகியவற்றை உள்ளடக்கி புதுச்சின்னத்தை உருவாக்க லாமே!*

*இவர்கள் யாவரும் சாவா வரம் பெற்று எப்போதுமே ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கப் போவதில்லை. இவர்களுக்குப் பின்னால் ஆட்சி பீடத்தில் உட்காரப் போகிறவர்கள் வேறு ஒரு முடிவு எடுக்கலாமே! கோபுரம் என்பது தமிழ்நாட்டின் கட்டிடக்கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இற்றைக்கு இத்துணை சாதனங்கள் நம்மிடையே உள்ளபோதிலும் ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம் போன்ற ஒரு கோபுரத்தைக் கட்டத்தான் முடியுமா? இந்துக்களையும், அவர்களது சின்னங்களையும், அவர்களது மத உணர்வுகளையும் இகழ்வதையே தொழிலாகக் கொண்டுள்ளனர் இவர்கள். இதுதான் இவர்களின் மதச் சார்பின்மைக் கொள்கை.* ***

---

## “பாலாஜி திருக்கல்யாணமும், திருமலை வைபவங்களும்”

*ஊடகங்களில் திருமலைத்திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் தலைமை அர்ச்சகர் திரு. வேங்கடரமணதீக்ஷிதலு மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக செய்தி வெளிவந்துள்ளது. மரபுளை மீறி அவர் கோயில் பிரசாதங்களை (அது என்னவென்று குறிப்பிடப்படவில்லை. அது சடாரியாகக்கூட இருக்கலாம்!) முகேஷ் அம்பானி தங்கியிருந்த இடத்திற்குச் சென்று சேர்ப்பித்தார் என்பதே அந்தக் குற்றச்சாட்டு. இது வரவேற்கத்தக்கதே. ஆனால் அதேசமயம் உத்ஸவர் திருவேங்கடமுடையான் திருமலையில் எழுந்தருளியிருக்க திருக்கோயிலுக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லாத அங்கு எழுந்தருளியிருக்கும் உத்ஸவர் ஸ்ரீனிவாஸனைப் போல ஒரு பதுமையை உண்டாக்கி (இது ஒரு பொம்மை வடிவிலான திருவேங்கமுடையானே. அதனால்தான் பதுமை என்ற சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.) பல மாநகரங்களில் திருவேங்கடமுடையான் திருக்கல்யாணம் என்ற பெயரில் மக்களின் பக்தியைப் பணமாக்கும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின்மீது யார் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பார்கள்? இவர்கள் செய்யும் விளம்பரங்களில் நீங்கள் கண்டு களிக்கும் திருவேங்கட முடையான் திருக்கல்யாணம் திருமலையில் உள்ள திருவேங்கமுடையான் விக்ரஹத்தைக் கொண்டு செய்யப்படுவது அல்ல. இது வேறு ஒரு திருவேங்க முடையான் விக்ரஹம் என்ற அறிவிப்பைச் செய்திடவேண்டும். இந்த விளம்பரம் ‘‘இந்த பணியாரம் அசல் நெய்யில் செய்யப்பட்டது அல்ல’’* "Smoking is Injurious to Health" *என்ற வாசகங்களுடன் மண்டை ஓடு சின்னத்தைப்*

போடுவதற்கு ஒப்பாகும். இதற்கு ஆங்கிலத்தில் Statutory warning என்று பெயர். இதற்கு ஒப்பானதுதான் இங்கே திருக்கல்யாணம் செய்து கொள்ளும் விக்ரஹம் ஒரிஜினல் திருவேங்கடமுடையான் விக்ரஹம் அல்ல என்ற விளம்பர மாகும். இதை அவர்கள் கட்டாயமாக விளம்பரம்செய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் திருவேங்கமுடையான் இப்படி ஊர் ஊராகச் சென்று கல்யாணம் செய்து கொண்டு பண வேட்டையாடுவது ஏன்? இதனால் யார் பயனடைகிறார்கள்?

அதற்கு மேலும் திருமலையில் திருக்கல்யாணம் நடப்பது போன்ற பிரமையை உண்டு பண்ணுவதற்காக பிரபல வித்வான்களுடைய வர்ணனையும் இந்தத் திருக்கல்யாண உத்ஸவங்களில் சேர்க்கப்படுகிறது. திருமலையில் திருமடைப்பள்ளி கைங்கர்யத்திற்காக அண்மைக் காலத்தில் நூற்றுக்கணக்கான மாத்வர்களும் ஸ்மார்த்தர்களும் பணி நியமனம் பெற்று உள்ளனர். திருவேங்கட முடையானுக்குத் தத்தம் மதக்குறியீட்டோடு தளிகை எடுப்பதுகூட இவர்கள்தான்.

திருச்சுற்றுகளில் பல்லவர்கள் காலந்தொட்டு பொறிக்கப்பட்ட பல்வேறு கல்வெட்டுகள் அமைந்துள்ளன. இவையெல்லாம் நம் பாரம்பர்யத்தை வெளிப்படுத்தும் சின்னங்களாகும். ஆங்காங்கே திருமதில்களில் தென்கலைத் திருமண் காப்புகள் அமைந்துள்ளன. கல்வெட்டுகள் அச்சிடப்பட்டுவிட்டன. அதனால் அவற்றின்மீது பொன்னால் ஆன தகடுகள் பதிப்பதில் எந்தத் தவறும் இல்லை என்று திருமலைதிருப்பதி தேவஸ்தானத்து தரப்பில் ஆந்திர மாநில உயர்நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் திரு. சுப்ரமண்யம் ஸ்வாமி தம்மையும் ஒரு மனுதாரராக இணைத்துக் கொண்டுள்ளார் என்பது ஆறுதல் அளிக்கும் செய்தியாகும். (ஸ்ரீவைஷ்ணவர்கள் யாரும் இதைப் பற்றி எந்தக்கவலையும் கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இருக்கவே இருக்கு! இதெல்லாம் எம்பெருமான் ஸங்கல்பம்! என்ற வார்த்தை. இந்த முயற்சியை எதிர்ப்பதும் ஏன் எம்பெருமான் ஸங்கல்பம் என்று கொள்ளக்கூடாது?) திருமலையில் தென்கலைத் திருமண்காப்புகளை அடியோடு ஒழித்துக்கட்டும் பல முயற்சிகளில் இந்தத்தகடு பதிக்கும் முயற்சியும் ஒன்றாகும். அண்மையில் சின்னஜீயர் பட்டத்திற்கு ஒரு வடகலை ஜீயரை நியமிக்கலாம் என்ற கோரிக்கை எழுந்ததும் குறிப்பிடத்தக்கதே. இந்த கோரிக்கையில் வலுவில்லை என்றாலும் 'சும்மா கூச்சல் போட்டு வைப்போமே' என்ற எண்ணத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இவற்றையெல்லாம் பாஞ்சஜன்யம் வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் தொடர்புடையயோர் கொதித்து எழுந்தால் ஒழிய எந்தத் தீர்வினையும் நாம் காணமுடியாது. ✱✱✱

# திருமோகூர் மற்றும் யானைமலைக் கல்வெட்டுகள்

**இதழ் 130இன் தொடர்ச்சி. தொகுப்பு: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.**

**2)இடம்**-காளமேகப் பெருமாள் திருக்கோயில், மகா மண்டபத் தென்புற அதிட்டானம்.

காளமேகப் பெருமாள். பள்ளிகொண்ட பெருமாள் சன்னதிகளில் காலை சந்தி நித்திய நைவேத்தியங்களுக்குக் களவேழ்வி (களவழி நாடு) நாட்டு மானகுழி என்ற ஊரின் நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டு கூறுகிறது. இதனை விசயநகர அரசனின் அதிகாரி திம்மப்ப நாயக்கர் அளித்துள்ளார். இதற்காக நெல் 450 கலமும், பொன் 36உம் கொடுக்கப்பட்டது. இதற்குரிய ஆணையை காளமேகப் பெருமாளே அளித்ததாக இந்தக் கல்வெட்டு கூறுகிறது. (A.R.No. 76/ 1905.)

3)**இடம்**-காளமேகப் பெருமாள் திருக்கோயில், பள்ளி கொண்ட பெருமாள் சன்னதியின் வடபுற அதிட்டானம் மற்றும் கிழக்குப்புற அதிட்டானம்.

காளமேகப் பெருமாளுக்கு மார்கழி கல்யாணத் திருநாளின் போது நிவந்தம் அளித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கின்றது, இதற்கான ஆணையைப் பெருமாளே அளித்ததாகவும் குந்தவைச் சதுர்வேதிமங்கலத்து அந்தணர்கள் இந் நிவந்தத்திற்குப் பொறுப் பாக இருந்தார்கள் என்றும் இக் கல்வெட்டு கூறுகிறது. மேலும் இத்திருநாளில் பணி செய்யும் கோயில் பகவர்கள் (முக்கோல் பிடித்த ஸந்யாசிகள்) இருவருக்கு பெருமாளுக்குப் படைத்த பிரசாதம் தானமாகத் தர வேண்டும் என்றும் கூறுகிறது. (A.R.No. 334/ 1918.)

1) ‘‘நங்குந்தவைச் சதுர்வெதி மங்கலத்து சமெ(ப்) பாப்பாற்கு மார்கழி கண்ணாலத்துக்குப் புறப்பட்டு நடையநிலே நிற்க தாங்கள் நம்வீடு நோ

2. க்கிச் செய்த நன்மைகளும் நடையனுக்கு வேண்டுவனவுக்கு

தாங்கள் செய்யக் கடவராகவும் சொன்னபடியும் வீட்டுக் காரியஞ் செய்கிற (ப)கவர்களில் அரட்ட முக்கி தாஸனும் கோவணவர்களுஞ் சொன்னமையில் நடையனுக்கு வேண்டுவன செய்யக் கடவராகவுஞ் சொல்லி ந

௩. டையனிலிருந்து நாமுண்ட கலமிவர்களுக்கே குடுக்கக் கடவராகவும் கண்ணாலங்களில் வேட்டைக்குப் புறப்பட்டால் முன்பு பெறும்படி நாமுண்ட கலமுட்படக் குடுக்கக் கடவராகச் சொன்னோமிப்படி கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிவித்துக் கொள்க. அருளால் திருமந்திர வோலை எழுத்து தி''

௪. ருக்காளமேக நல்லூருடையான் மனத்துளா.... திருவுடையானான நாராயண தாஸநெழுத்து.

**4)இடம்**-காளமேகப்பெருமாள் திருக்கோயில், மகா மண்டபம் கிழக்குச் சுவர், வெளிப்புறம்.

முதல் இரு கல்வெட்டுகள் பெருந்துறைப் பெருமாள் மற்றும் சோலைமலை ஆகியோரின் நிரந்தர பக்தியைத் தெரிவிக் கின்றன. இந்தக் கல்வெட்டு கி.பி. 14-ஆம் நூற்றாண்டு எழுத்த மைதித் துண்டுக் கல்வெட்டாகும். தமிழ்நாட்டு தொல்லியல் துறை கல்வெட்டு எண் 135/ 2003.

**5)இடம்**-காளமேகப் பெருமாள் திருக்கோயில், பள்ளி கொண்ட பெருமாள் ஸன்னதி மண்டபத்தின் படிக்கட்டு.

பராங்குச அய்யங்கார் மகன் மற்றும் சுந்தரப்பிள்ளை பாண்டியன் என்போரின் நிரந்தர பக்தியைத் தெரிவிக்கின்றது. (சதாசேவை) கல்வெட்டு எண். தமிழ்நாடு தொல் இயல் எண் 136/2003.

**6)இடம்**-காளமேகப் பெருமாள் கோயில், அனுமார் கோயில் முன் மண்டபத் தூண்.

திருமடைவளாகம் அமைக்கும் ஒருவனுக்கு கோயிலில் இருந்து நாள் ஒன்றுக்கு நாழி பிரஸாதம் அளிப்பதாக ஜீயர் சௌமித்ரதாசர் தச்சரிடமிருந்து பத்து அச்சுகள் (காசுகள்) வாங்கிக்

கோயில் பண்டாரத்தில் முதலாக வைத்ததை இக் கல்வெட்டுக் கூறுகிறது. கோயில் நிருவாகத்தில் ஜீயர்கள் பங்காற்றியதை இக்கல்வெட்டு உறுதி செய்கிறது. (இந்த கல்வெட்டு பிற்காலப் பாண்டிய மன்னனான குலசேகரன் காலத்து கல்வெட்டாகும். கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தாகக் கொள்ளப்படுகிறது. (A.R.No. 335/ 1918.)

**7)இடம்**- காளமேகப் பெருமாள் திருக்கோயில், வெளிப்புற தெற்குத் திருமதில் உட்புறம்.

கோயில் திருப்பணிக்குத் திருவிடையாட்டமாகக் காள மேகப் பெருமாளுக்குச் செங்குடி நாட்டுச் சிறு குன்றத்தூர் என்ற ஊர் அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டுக் கூறுகிறது. இக்கோயில் திரிதண்டி ஸன்னியாசிகளும், வைஷ்ணவர்களும் இக்கல் வெட்டில் குறிப்பிடப்படுகின்றனர். கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

இந்தக் கல்வெட்டும் 13ஆம் நூற்றாண்டு பாண்டிய மன்னன் ஒருவனின் கல்வெட்டாகக் கொள்ளப்பட்டுள்ளது. கல்வெட்டு எண் A.R.No. 329/ 1918.

**‘‘ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்ரவர்த்தி கோனேரின்மை கொண்டான் தென்பரப்புனாட்டு திருமோகூர் நின்றருளிய பரம ஸ்வாமிகள் கோயில் திருப்பதி ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும், த்ரிதண்டி ஸந்யாசிகளுக்கும் காளமேகத்து திருப்பணிப்புற திருவிடை யாட்டமாக செங்குடி நாட்டுச் சிறுகுன்றத்தூர் பெருநான் கெல்லைக் குட்பட்ட நீர், நிலமுங் கருஞ் செய்புன்செயும் குளமும் குளப்பரிப்பும் ஏம்பல்களும் நத்தமும் ..... இறையிலியாகக் குடுத்த’’.**

**8)இடம்**- காளமேகப்பெருமாள் திருக்கோயில், தெற்கு வெளிப்புற திருமதிலின் உட்புறம்.

தென்பறப்பு நாட்டுத் திருமோகூர் பரமசுவாமிகள் கோயிலுக்கு வெண்பில் நாட்டுப் பிரம்மதேயம் ஆலோடு பட்டான் குமாரபவித்திரச் சதுர்வேதி மங்கலம் என்ற ஊர் திருப்பணிப் புறத் திருவிடையாட்டமாக அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டுக் கூறுகிறது. கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர்கள்

காலத்துக் கல்வெட்டாகும். (A.R.No. 331/ 1918.) இந்தக் கல்வெட்டும் கோயில் நிர்வாகத்தில் த்ரிதண்டி ஸந்யாசிகளும் ஸ்ரீவைஷ்ணவர்களும் பங்கு கொண்டதைத் தெரிவிக்கிறது.

**9)இடம்**-காளமேகப் பெருமாள் திருக்கோயில், தெற்கு வெளிப்புற உட்புறம்.

துங்கவனத்தில் பிரம்மதீர்த்தக்கரையில் அரசன் பெயரால் சுந்தர பாண்டிய சோழக்கோனார் என்பவர் எடுப்பித்த வேதநாயகர் கோயிலுக்குத் தென்பறப்பு நாட்டுப் பன்னாட்டான் கோட்டை என்ற ஊர் காராண்மை திருவிடையாட்ட இறையிலியாக அளிக்கப் பட்டதை இக்கல்வெட்டு கூறுகிறது. இக்கோயில் யானை மலையின் தென்கோடியில் உள்ளது. இங்குள்ள பாறையில் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு ஒன்றும் காணப்படுகின்றது. இந்த இடத்தில்தான் தற்போது பிள்ளை லோகாசார்யருடைய திருவரசு அமைந்துள்ளது. முதலாம் மாறவர்மன் குலசேகரனின் 40ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு இது. கி.பி. 1308 ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டு உள்ளது. (A.R.No. 333/ 1918.)

2. ‘‘ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவன சக்கரவத்தி கோநேரின்மை கொண்டான் தென்பறப்பு நாட்டுத் திருமொகூர் நின்றருளிய பரமஸ்வாமிகள் கோயில் திருப்பதி

3. வயிஷ்ணவர்களுக்கும் த்ரிதண்டி ஸந்யாசிகளில் இராமானுஜ ஜீயற்கும் தங்களூர் ஸ்ரீதுங்கவனத்தில் பிரம்மதீர்த்தக்கரையில் முன்னாள் இறங்கிக் கிடந்து நம்பேரால் சுந்தரபாண்டிய

4. ச் சோழ கோனார் எழுந்தருளிவித்த நாயனார் வேதநாதற்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நித்த (நிமந்தங்)களுக்கும் திரு நந்தவனம் செய்கிற ஸ்ரீவயிஷ்ணவர்களுக்குக் கொற்றிலக்கைக்....

11. கொள்ளவும் பாற்க.. ஸ்ரீமற்கீத்திக்கு மேல் கோமாற பன்மரான த்ரிபுவன சக்கரவத்திகள் எம்மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீகுலசேகர தேவற்கு யாண்டு 40வது ........’’

**10)இடம்**-காளமேகப்பெருமாள் திருக்கோயில், தெற்கு வெளிப்புறத் திருமதில் உட்பக்கம்.

காளமேகப்பெருமாள் கோயிலில் காளமேகமான காங்கேயர் என்பவர் திருவாழி ஆழ்வாரை (சக்கரத்தாழ்வார்) எழுந்தருளுவித்து நிலக்கொடை அளித்ததை இக்கல்வெட்டுக் கூறுகிறது. இந் நிலத்தின் எல்லைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இக்கல் வெட்டில் கூறப்படும் சக்கரத்தாழ்வார் சந்நிதி குறிப்பிடத் தக்க ஒன்றாகும். தற்போதும் இக்கோயிலில் இவ்வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. இந்தக் கல்வெட்டைப் பற்றிய விரிவான செய்திகள் பாஞ்ஜன்யம் இதழ் 129, துணுக்குத் தோரணம் தலைப் பில், பக்கம் 84 முதல் 86 வரை கொடுக்கப் பட்டுள்ளன. அங்கே கண்டுகொள்க. சடையவர்மன் முதலாம் சுந்தர பாண்டியன் காலத்து கல்வெட்டு இது. கி.பி. 1259ஆம் ஆண்டு பொறிக்கப் பட்டது. (A.R.No. 330/ 1918.)

**11)இடம்**-காளமேகப்பெருமாள் திருக்கோயில், வெளித் திருசுற்று மதில், தென்கிழக்கு, தென்மேற்கு வடக்குப்புறப் பகுதிகள்.

தளவாய் நரசப்பையனின் அனுமதியுடன் அவரது மகன் வெங்கப்பய்யன் வெளித் திருச்சுற்று மதிலை பிரமாதி, வெகு தான்ய மற்றும் விக்கிரம வருடங்களில் (கி.பி. 1698, 1699, 1700) கட்டினார் என்று இக்கல்வெட்டுகள் கூறுகின்றன. இவை மதுரை நாயக்கர் காலத்துக் கல்வெட்டுகளாகும். கி.பி. 1700ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டவை. தமிழ்நாடு தொல் இயல் துறை கல்வெட்டு எண் 142/2003.

**12)இடம்**-காளமேகப் பெருமாள் திருக்கோயில், தெப்பக் குளம், மைய மண்டபம்.

இத்துண்டுக் கல்வெட்டுகள் கோயிலுக்கு விடப்பட்ட நிலங்கள் பற்றியும் அவற்றை இறையிறுக்கும் கோலால் அளந்ததையும் நிலம் விற்றுக் கொடுத்ததைப் பற்றியும் தெரி விக்கின்றன. ஒரு துண்டுக் கல்வெட்டு முதலாம் குலோத்துங்க சோழனின் மெய்கீர்த்திப் பகுதியுடன் உள்ளது. பிற்காலப் பாண்டியர்கள் காலத்துக் கல்வெட்டு. கி.பி. 12, அல்லது 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளப் படுகிறது. தமிழ்நாடு தொல்லியல் துறை கல்வெட்டு எண். 143/ 2003. (தொடரும்)

# கண்டதும் கேட்டதும்

**ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.**

ஞான மண்டபம் என்று அழைக்கப்படும் மேல்கோட்டை திருநாராயணபுரத்தில் எம்பெருமானார் பல ஆண்டுகள் எழுந்தருளி யிருந்து நமது விசிஷ்டாத்வைதக் கொள்கைகளைப் பரப்பி வந்தார். **தக்ஷிண பதரிகாச்ரமம்** என்று கொண்டாடப்படும் மேல்கோட்டை திருநாராயணபுரம் பல்வகையிலும் இன்றும் சிறப்புற்று விளங்குகிறது. செல்வப்பிள்ளை உத்ஸவம் கண்டருளும் அழகு மற்றைய திவ்ய தேசங்களில் காணப்படாததொன்றாகும். இன்றும் திருமடைப்பள்ளி ஆசாரம் எந்த வழுவுமின்றி கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ***(திருவரங்கம் பெரியகோயிலில் திருமடைப்பள்ளி ஆசாரம் சீர் அழிந்த நிலையில் காணப்படுவது கண்கூடு. இந்த நிலைமையை மாற்ற ஸ்தலத்தார்களும், கோயில் நிர்வாஹமும் முன்வரவேண்டும். ''இவை யெல்லாம் கலியுகத்தின் கொடுமை, எம்பெருமான் வாத்ஸல்ய குணம் மிக்கவன், எந்தப் பிழைகளையும் ஆசாரக் குறைவுகளையும் பொறுத்த ருள்வான். ஏதோ கைங்கர்யம் இந்த அளவிற்காவது நடை பெற்றுவருகிறதே என்று நாம் சந்தோஷப் படவேண்டும்'' என்றெல்லாம் கூறுவது போலித் தனமான வாதமாகும். இவ்வாறு கூறுபவர்கள் திருநாராயணபுரத்திற்குச் சென்று அங்கு நடைபெற்று வரும் ஆராதனை முறைகளையும், அருளிச் செயல் ஸேவிக்கப்படும் அழகையும், திருமடைப்பள்ளி ஆசாரங்களையும் ஒரு முறையாவது பார்த்து வரவேண்டும். பெரியகோயில் என்று அழைக்கப்படும் திருவரங்கத்தில் இழிவான பல்வேறு செயல்களுக்கு இடமளிக்கக் கூடாது.)***

1978ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் நாள் மேல்கோட்டையில் ஸம்ஸ்க்ருத மொழிக்கான ஆய்வுக்கூடம் உருவாக்கப்பட்டது. கர்னாடக அரசின் நிதியுதவி கொண்டு நடத்தப்படும் இந்த ஆய்வுக் கூடத்தில் 2010, ஏப்ரல் 21, 22 மற்றும் 23 ஆகிய நாட்களில் கோயில், திருமலை, பெருமாள் கோயில், ஞானமண்டபம் ஆகிய நான்கு திவ்ய தேசங்களில் இராமானுசர் ஆற்றிய பணிகளும், அந்தந்தத் திருக்கோயில்களுக்கான ஆகமங்கள் குறித்தும் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது.

அந்தக் கருத்தரங்கில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். 21-4-2010

அன்று வரவேற்புரை, சிறப்புச்சொற்பொழிவு, திறவுகோல் உரை, அறிஞர்களைப் பாராட்டுதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடந்தேறிய பிறகு, மாலை நடைபெற்ற கருத்தரங்கில் ஸ்ரீ.உ.வே. கருணாகராசாரியர்-சென்னை, ஸ்ரீ.உ.வே. ரங்கராஜன்-பெங்களூர், மற்றும் ஸ்ரீ.உ.வே. பத்மநாபன் (Reader in Sanskrit, University of Madras) ஆகியோர் பங்கு கொண்டனர்.

ஸ்ரீ.உ.வே. பத்மநாபன் தம்முடைய உரையில் திரு. நாகசாமி எழுதிய Ramanuja-Myth And Reality என்ற புத்தகத்திலிருந்து பல சொற்றொடர்களைப் படித்துக் காண்பித்தார். தம்முடைய உரையின் ஊடே கருடஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர் அந்த நூலுக்கான மறுப்பு எழுதி உள்ளதையும் குறிப்பிட்டார். மேலும் பாஞ்ச ஜன்யம் 131ஆவது இதழில் வெளி வந்துள்ள சந்தக்கவி V.S.N. Rama swamy அவர்களின் கடிதத்திலிருந்து சில பகுதிகளை அவை யோருக்குப் படித்துக் காண்பித்தார். அப்போது அவர் இது போன்ற உணர்ச்சி பொங்கிய கடிதங்கள் எழுதுவதால் நாம் நாகசாமியின் கூற்றுக்களை மறுக்க இயலாது. ஆகவே வரலாற்று வல்லுனர்களும் குருபரம்பரை நூல்களில் தேர்ச்சி பெற்றவர்களும் ஒருசேர ஓர் குழுவிலே இருந்து எல்லோரும் ஒப்புக்கொள்ளும் அளவிற்கு இராமா னுசருடைய வாழ்க்கை வரலாறு மீண்டும் எழுதப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்.

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் இன்று ஒவ்வொரு ''அறிஞரும்'' தன் மனதுக்குத் தோன்றியவற்றை யெல்லாம் எழுதி வருகின்றனர். ஒரு பெண்மணி, ஆண்டாள் அறிந்தது காமச்சுவை ஒன்றே என்று பிதற்றியுள்ளாள். நான்தான் ''பச்சைத் தமிழன்'' என்றும், தன் இனத்தவர்களுக்கே தமிழ் சொந்தம் என்றும் கூறிக் கொள்ளும் ஒரு போலித்தமிழன் ஆண்டாளைப் பற்றி பச்சைப் பச்சையாக சொல்ல, எழுத அஞ்சும் வார்த்தைகளை **ஆய்வு நூல்** என்ற பெயரில் வெளியிட்டுள்ளான். இதனால்தான் தன்னைப் பச்சைத் தமிழன் என்று கூறிக்கொள்கிறான் போலும். அதுபோன்று நாகசாமி இராமானுசர் மீதான வெறுப்பாகிய விஷத்தை உமிழ்ந்து ள்ளார். தான் சொல்வதையே மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே இருப்பார். கருடஸ்வாமியின் மறுப்புப் புத்தகம் ஆதாரபூர்வமான ஓர் நூலாகும். நாகசாமி உண்மையிலேயே தான் எழுதியதெல்லாம் சரி என்று நிலைநாட்டக்கூடுமானால் ஓர் அரங்கில் தன்னுடைய வாதங்களை முன் வைக்க வேண்டும்.